# பட்டுக்கோட்டை நகராட்சி

## 2022–2023ம் ஆண்டு
## நிர்வாக அறிக்கை

“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு”

# நிர்வாக அறிக்கை 2022–2023

## பொருளடக்கம்


| வ.எண் | பிரிவு | பக்க எண்கள் |
|---|---|---|
| 1. | நகர்மன்றம் | 3–9 |
| 2. | நிர்வாக பிரிவு | 10–18 |
| 3. | பொறியியல் பிரிவு | 19–25 |
| 4. | பொது சுகாதாரப் பிரிவு | 26–31 |
| 5. | வருவாய் பிரிவு | 32–36 |
| 6. | நிதி நிர்வாகம் | 37–41 |
| 7. | தணிக்கை | 42–45 |
| 8. | நகரமைப்பு பிரிவு | 46–54 |
| 9. | மின்னணு மேலாண்மை பிரிவு | 55–57 |

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

1

## நகர் மன்றம்

# <u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>
## <u>நிர்வாக அறிக்கை</u>
## <u>2022–2023</u>

**<u>அமைப்பும் நிர்வாகமும்</u>**

பட்டுக்கோட்டை நகரம் தேர்வுநிலை பேரூராட்சி நிலையிலிருந்து அரசாணை எண்..518 எண்ணிட்ட 3.3.1965ம் தேதியிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை உத்திரவு நாள்.. 3.3.1965ன்படி 1.4.1965 அன்று மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு தற்சமயம் 22.05.1998 முதல் தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

**<u>எல்லை</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியின் பரப்பளவு 21.83 ச.கி.மீ ஆகும். அறிக்கையாண்டில் இதில் ஏதும் மாற்றம் இல்லை. நகர எல்லையில் மாற்றம் இல்லை. நகராட்சியின் வார்டுகள் 33 ஆக இருந்து வருகிறது.

**<u>நகராட்சி எல்லைக்குள் உள்ள வருவாய் கிராமங்கள் பின்வருமாறு</u>**

1) ரெங்கோஜியப்பா தோட்டம்
2) மஹாராஜ சமுத்திரம்
3) நாடியம்பாள்புரம்
4) கைலாசநாதபுரம்
5) பாப்பாவெளி பாளையக்கோட்டை

### <u>தோற்றம்</u>

இந்நகராட்சி 176. பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வரம்பிற்கும், தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் உட்பட்டது. இந்நகராட்சி தேர்வு நிலை பேரூராட்சி நிலையிலிருந்து அரசாணை எண்..518 எண்ணிட்ட 3.3.1965ம் தேதியிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை உத்திரவு நாள்..3.3.1965ன்படி 1.4.1965 அன்று மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் அரசாணை எண்.. 200, 7.02.1975-ம் தேதியிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணையில் 1.04.1975-ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 17.04.1984-ம் தேதியிட்ட 500ம் எண்அரசாணையின்படி 17.04.1984 முதல் முதல் நிலை நகராட்சியாகவும் உயர்வு செய்யப்பட்டது. அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 22.05.1998-ம் தேதிய 85-ம் எண்ணிட்ட உத்திரவுகளின்படி 22.05.1998 முதல் தேர்வுநிலை நகராட்சியாக தேர்வு

செய்யப்பட்டு தொடர்ந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் எந்த ஒரு பகுதியும் சேர்க்கப்படவில்லை. தேர்வு நிலை நகராட்சியாக எந்த ஒரு பகுதியும் நீக்கப்படவுமில்லை. மேலும், அதற்கான உத்தேச திட்டங்களும் இல்லை.

## மக்கட் தொகை

2011ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் உத்தேச மொத்த மக்கட்தொகை 73135 ஆகும். இதில் ஆண்கள் 36386 நபர்களும், பெண்கள் 36748 நபர்களும், இதுதவிர 1 நபர் மற்ற இனத்தவராவார். 2011ம் ஆண்டு மக்கட்தொகை பெருக்கம் 11.54 சதவிகிதம் ஆகும். 2001ம் ஆண்டு மேறகொள்ளப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மொத்த மக்கட்தொகை 65,533 ஆகும். இதில் 32,718 பேர் ஆண்களும், 32,815 பேர் பெண்களும் ஆவர். 1991ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கட்தொகை 58,062 ஆக இருந்தது. இதில் ஆண்கள் 29376 பேரும், பெண்கள் 28686 பேரும் ஆவர்.

## அட்டவணை இனத்தினர் மக்கள் தொகை

Scheduled caste - 4286 Scheduled Tribes - 537

## இந்திய மக்கட் தொகை–2011 (Population Census - 2011)

**10** ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு பணி–**2011**–ஆம் ஆண்டிற்கு பட்டுக்கோட்டை நகராட்சியில் கடந்த **9.2.2011** முதல் **28.02.2011** வரை நடைபெற்றது. இப்பணியில் நகராட்சி ஆணையர் அவர்களை பொறுப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு நகர பகுதியானது **128** கணக்கெடுப்பு பகுதியாக பிரிக்கப்பட்டு இக்களப் பணிக்காக **22** மேற்பார்வையாளர்களும், **128** கணக்கெடுப்பாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இப்பணியை இந்நகராட்சில் உரிய காலத்தில் சிறப்பாக முடித்ததற்காக பொறுப்பு அலுவலர் என்ற முறையில் நகராட்சி ஆணையர் அவர்களுக்கும், உதவியாளர், மேற்பார்வையாளர் மற்றும் கணக்கெடுப்பாளர் ஆகியோருக்கு அறிக்கை ஆண்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பின்படி வார்டு வாரியாக உத்தேச மக்கள் தொகை பின்வருமாறு.

| வார்டு எண் | மக்கள் தொகை | ஆண் | பெண் | இதர இனத்தவர் |
|---|---|---|---|---|
| 1. | 2581 | 1276 | 1305 | 0 |
| 2. | 1952 | 942 | 1010 | 0 |
| 3. | 2423 | 1195 | 1228 | 0 |
| 4. | 1548 | 773 | 775 | 0 |
| 5. | 2085 | 1059 | 1026 | 0 |
| 6. | 1671 | 833 | 838 | 0 |
| 7. | 3351 | 1640 | 1711 | 0 |
| 8. | 1645 | 812 | 833 | 0 |
| 9. | 2268 | 1144 | 1124 | 0 |
| 10. | 3996 | 2001 | 1994 | 1 |
| 11. | 3318 | 1662 | 1656 | 0 |
| 12. | 1275 | 613 | 662 | 0 |
| 13. | 1069 | 525 | 544 | 0 |
| 14. | 1056 | 518 | 538 | 0 |
| 15. | 654 | 291 | 363 | 0 |
| 16. | 1022 | 530 | 492 | 0 |
| 17. | 1227 | 631 | 596 | 0 |
| 18. | 1881 | 949 | 932 | 0 |
| 19. | 2643 | 1309 | 1334 | 0 |
| 20. | 1514 | 747 | 767 | 0 |
| 21. | 1525 | 757 | 768 | 0 |
| 22. | 1907 | 938 | 969 | 0 |
| 23. | 2216 | 1082 | 1134 | 0 |
| 24. | 1096 | 529 | 567 | 0 |
| 25. | 2020 | 1022 | 998 | 0 |
| 26. | 1810 | 833 | 977 | 0 |
| 27. | 4480 | 2244 | 2236 | 0 |
| 28. | 2386 | 1196 | 1190 | 0 |
| 29. | 3268 | 1656 | 1612 | 0 |
| 30. | 2428 | 1240 | 1188 | 0 |
| 31. | 4828 | 2440 | 2388 | 0 |
| 32. | 3184 | 1608 | 1576 | 0 |
| 33. | 2808 | 1391 | 1417 | 0 |
| கூடுதல் | **73135** | **36386** | **36748** | **1** |

# I.நகர்மன்றம்

பட்டுக்கோட்டை நகராட்சியில் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் – 2022 –ல் வெற்றி பெற்ற 33 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் **02.03.2022–ம்** தேதியன்று பதவியேற்றுக் கொண்டனர். மேலும், அனைத்து நகாமன்ற உறுப்பினர்களும் **04.03.2022–ம்** தேதியன்று நகர்மன்ற தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த மறைமுக தேர்தலில் வெற்றிப்பெற்று இந்நகராட்சியின் நகர்மன்ற தலைவராக **திருமதி. செ. சண்முகபிரியா, M.C.A.,** அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நகர்மன்ற துணைத்தலைவராக **26.03.2022–ம்** தேதியன்று நடைபெற்ற மறைமுக தேர்தலில் வெற்றி பெற்று **திரு.ப.சுரேஷ்** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் **33** நகர்மன்ற உறுப்பினர்கள் விபரம் கீழ்கண்டவாறு.

## பட்டுக்கோட்டை நகராட்சி

### நகர்மன்ற உறுப்பினர்கள் –2022

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | வ. எண். | பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|
| 1 | திருமதி. செ.சண்முகபிரியா,<br>நகர்மன்ற தலைவர். | 18 | திருமதி. பா.லதா பாஸ்கரன்,<br>17–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். |
| 2 | திரு.ப. சுரேஷ்,<br>நகர்மன்ற துணைத்தலைவர். | 19 | திரு. ச.சிவக்குமார்,<br>18–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 3 | திருமதி.கு.சாந்தி,<br>1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 20 | திரு. ரா.ரவிக்குமார்,<br>19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். |
| 4 | திருமதி. ர.ராதிகா,<br>2–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 21 | திரு. மா.சுரேஷ்,<br>20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | திருமதி.பா.நாகலெட்சுமி,<br>3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 22 | திரு. கே.நாடிமுத்து.<br>21–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். |
| 6 | திரு. ஆர். ஜெயராமன்,<br>4–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 23 | திரு. பூ.சரவணக்குமார்,<br>22–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | திருமதி. ர. ரஷ்யா பேகம்,<br>5–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 24 | திருமதி. ச.நளினி சம்பத்,<br>23–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | திருமதி. நளினி கோபி,<br>6–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 25 | திருமதி. உ.பிரபாகனி.<br>24–வது வார்டு நகர்மன்றஉறுப்பினர் |
| 9 | திரு. வெ.ராமலிங்கம்.<br>7–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 26 | திரு.எஸ்.ஆர்.ஜவகர்பாபு<br>25–வது வார்டு நகர்மன்றஉறுப்பினர் |
| 10 | திரு. மு. காமராஜ்.<br>8–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 27 | திருமதி. கா. கலையரசி,<br>26–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | திரு. சு. முத்துச்சாமி.<br>9–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 28 | திருமதி. வி.ஜெயபாரதி,<br>27–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | திருமதி. ரா.பொன்மணி ராஜேந்திரன்<br>10–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 29 | திருமதி. வி.லதா,<br>28–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| 13 | திருமதி.உ.மகாலெட்சுமி,<br>12–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 30 | திரு. சி.முருகேசன்,<br>29–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். |
| 14 | திருமதி. இ. பிரியா,<br>13–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். | 31 | திரு. எஸ்.ஏ.ஆர். ரகுராமன்,<br>30–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | திரு.வீ. குமார்,<br>14–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 32 | திரு. ஆர்.கே.குமணன்,<br>31–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | திருமதி. மா.தேன்மொழி,<br>15–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | 33 | திருமதி. ரெ.கோமதி,<br>33–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | திருமதி. மா.செல்வராணி,<br>16–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | | |

## நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கிய பொருட்கள் விபரம் 2022–2023

| வ. எண் | கூட்ட விபரம் | மொத்த கூட்டங்கள் எண்ணிக்கை | மொத்த பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சாதாரணக் கூட்டம் | 2 | 122 |
| 2 | அவசரக் கூட்டம் | 7 | 223 |
| 3 | சிறப்புக் கூட்டம் | 1 | 2 |
| | **மொத்தம்** | **10** | **347** |

மேற்கண்டுள்ளவாறு மன்றக்கூட்டங்களில் அறிக்கையாண்டில் 36 எண்ணிக்கை பொருள்கள் முடிவு செய்யப்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள் இல்லை.

அறிக்கையாண்டில் நியமனக்குழு கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. வரி மேல்முறையீட்டுக் குழு மற்றும் ஒப்பந்தக்குழு கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

| வ. எண் | குழுவின் பெயர் | கூட்டங்கள் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நியமனக்குழுக் கூட்டம் | .. | .. |
| 2. | ஒப்பந்தக்குழு கூட்டம் | .. | .. |
| 3. | வரி மேல்முறையீட்டுக்குழு கூட்டம் | .. | .. |
| | கூடுதல் | .. | .. |

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

**2**

# நிர்வாகப் பிரிவு

# II.நிர்வாகப் பிரிவு

## நகராட்சி அலுவலர்கள்

## ஆணையர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.கா. சுப்பையா,<br>நகராட்சி ஆணையர் | 01.04.2022 முற்பகல் முதல்<br>28.06.2022 வரை. |
| 2. | திரு.த. சௌந்தரராஜன்,<br>நகராட்சி ஆணையர் | 24.08.2022 முற்பகல்<br>முதல் 31.03.2022 வரை |

## நகராட்சி பொறியாளர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.எல். குமார்,<br>நகராட்சி பொறியாளர் | 01.04.2022 முதல் 31.03.2023<br>வரை |

## நகரமைப்பு அலுவலர்

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆர். கருப்பையன்<br>நகரமைப்பு ஆய்வாளர். | 01.04.2022 முதல்<br>31.03.2023 வரை |

## துப்புரவு அலுவலர்

| | | |
|---|---|---|
| 1. | திரு. அழ. நெடுமாறன்<br>துப்புரவு அலுவலர் | 01.04.2022 முதல்<br>31.03.2023 வரை |

## மேலாளர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.நா. அறிவுசெல்வன்<br>மேலாளர். | 01.04.2022 முதல்<br>30.06.2022 வரை |
| 2. | திருமதி.அ.விஜயலெட்சுமி,<br>மேலாளர். | 14.09.2022 முதல்<br>31.03.2023 வரை |

## கணக்கர்

| | | |
|---|---|---|
| 1. | திரு.கே.எம். முருகேசன்<br>கணக்கர் | 01.04.2022 முதல்<br>31.3.2023 வரை |

## உதவிப்பொறியாளர்

| | | |
|---|---|---|
| 1. | கோ. தியாகராஜன்<br>உதவிப்பொறியாளர் | 01.04.2022 முதல்<br>31.03.2023 வரை |

# 2022–2023

பொதுப்பிரிவில் அமைச்சுப் பணியில் சத்துணவு உட்பட 1 உதவியாளர், இளநிலை உதவியாளர்கள் 10 நபர்களும், தட்டச்சர் ஒருவரும், கணினி உதவி திட்ட அலுவலர் ஒருவர், மற்றும் தேவையான இதர பணியாளர்கள் உள்ளனர்.

**காலிப் பணியிட விபரம்**

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது உள்ள பணியிடம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | 1 | –– |
| 2. | கணக்கர் | 1 | 0 | 1 |
| 3. | உதவியாளர் | 3 | 3 | –– |
| 4. | இளநிலை உதவியாளர் | 8 | 8 | –– |
| 5. | தட்டச்சர் | 1 | 0 | 1 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | –– |
| 7. | அலுவலக உதவியாளர் | 4 | 4 | –– |
| 8. | இரவு காவலர் | 1 | 0 | 1 |

**மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம்**

இந்நகராட்சி கட்டுப்பாட்டில் சத்துணவு மையங்கள் இயங்கி வருகிறது. இதற்காக உதவியாளர் மற்றும் கணக்கர் பணியிடத்தில் திரு.பி.சந்திரன் என்பவர் **01.04.2022** முதல் **31.03.2023** முடிய பணிபுரிந்து வருகிறார். இவருக்கான மாதாந்திர ஊதியம் சத்துணவு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சி பள்ளிகள் | 14 |
| 2. | அரசு உதவிபெறும் பள்ளிகள் | 4 |
| 3. | ஆதி திராவிடர் மற்றும் அரசு பள்ளிகள் | 4 |
| | **கூடுதல்** | **22** |

சத்துணவு உட்கொள்ளும் மாணவர்களின் பள்ளிகளின் தரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | ஆரம்ப பள்ளி | 10 |
| 2. | நடுநிலை பள்ளி | 8 |
| 3. | உயர்நிலை பள்ளி | -- |
| 4. | மேல்நிலை பள்ளி | 4 |
| | **கூடுதல்** | **22** |

மேலும் மேற்கண்ட சத்துணவு மையத்தில் பணிபுரியும் சத்துணவு பணியாளர்கள் பணி நியமனம் முழுவதும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆவார். மேலும் சத்துணவு திட்டத்தில் கீழ்க்கண்டவாறு பணிபுரிந்து வருகிறார்கள்.

| **வ.எண்** | **பணியாளர் பெயர்** | **பணியிடம்** | **பணியில் உள்ளவர்கள்** |
|---|---|---|---|
| 1. | அமைப்பாளர்கள் | 22 | 13 |
| 2. | சமையலர்கள் | 22 | 19 |
| 3. | உதவியாளர்கள் | 22 | 13 |
| | **கூடுதல்** | | **45** |

மேலும் அரசாணை எண்..273, சத்துணவு திட்டம், நாள்..15.07.1997ன்படி பட்டுக்கோட்டை ஊராட்சி ஆணையர் நிர்வாகத்திலிருந்து 8 அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளும் 01.04.1998 தேதி முதல் நகராட்சி நிர்வாகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேதி முதல் 8 அரசு மற்றும் உதவிபெறும் பள்ளி சத்துணவு மையங்களும் நகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மேலும் சத்துணவு பணியாளர்கள் அனைவருக்கும் மே 2012 மாதத்திலிருந்து மாத ஊதியம் மற்றும் ஓய்வூதிய தொகை மாவட்ட கருவூலம் மூலம் ECS ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உணவூட்டு செலவினத்திற்கு தொகை மட்டும், மாவட்ட ஆட்சித்தலைவர், சத்துணவு பிரிவு அலுவலகத்திலிருந்து மான்யத் தொகைக்கு சத்துணவு நிதிக்கு காசோலை பெறப்பட்டு அனைத்து சத்துணவு மையங்களுக்கும் உணவூட்டு செலவினத்திற்கு தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 22 சத்துணவு மையங்களும் உணவுப் பொருளின் இருப்பின் நிலை பதிவு செய்யப்பட்டு வருவதால் எந்தவித தவறுகளும் நிகழாமல் இருந்து வருகிறது. மேலும் 22 சத்துணவு மையங்களில் ஒரு நாளைக்கு உணவு உண்ணும் மாணவ/ மாணவியர்களின் 2021–22–ம் ஆண்டிற்கு பின்வருமாறு.

| | |
|---|---|
| 1 முதல் 5ம் வகுப்புகள் | 1360 |
| 6 முதல் 8ம் வகுப்புகள் | 1179 |
| 9 முதல் 10ம் வகுப்புகள் | 389 |
| கூடுதல் | 2928 |

<u>ஆய்வு</u>

நகராட்சியின் எல்லைக்குள் இயங்கிவரும் மேற்குறிப்பிட்ட அனைத்து சத்துணவு மையங்களும் நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் இதர அலுவலர்களால் அவ்வப்பொது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>கட்டிட பராமரிப்பு</u>

நகராட்சிக்கு சொந்தமான 14 நகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள சத்துணவு மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# கொடி நாள் வசூல் 2022

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7ம் நாள் கொடி நாள் தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு 2022–ம் ஆண்டின் இலக்காக இந்நகராட்சிக்கு ரூ.2,00,000/–க்கு வசூல் செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது.

இதில் இந்நகராட்சியின் சார்பில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1,00,000/– மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

## 01.04.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் துயர்துடைப்பு மனுக்கள் பற்றிய விபரம்

இந்நகராட்சியில் மாண்புமிக தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து இணையதளம் மூலமாக பெறப்படும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் துயர்துடைப்பு நாள் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் மனுக்கள், சுதந்திர போராட்ட தியாகிகள் குறைதீர்ப்பு நாள் மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக மனுக்கள் மற்றும் திங்கள்தோறும் நடைபெறும் மாவட்டஆட்சியர் குறைதீர்ப்பு நாளில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பதில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மனுதாரருக்கு பதில் உடனடியாக நிலுவை இல்லாமல் அனுப்பப்படுகிறது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பதவியின் பெயர் | 2022–23ம் ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள் | பதில் அனுப்பப் பட்டவை | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் இணையதளம் வாயிலாக | 83 | 83 | ... |
| 2. | மாவட்ட ஆட்சியர் குறை தீர்ப்பு நாள் மனுக்கள் மற்றும் இணையதளம் வாயிலாக. | 5 | 5 | ... |
| 3. | மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக மனுக்கள் | 9 | 9 | ... |
| 4. | மாவட்ட ஆட்சியர் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் | ... | ... | ... |
| 5. | மாவட்ட ஆட்சியர் சுதந்திர போராட்ட தியாகிகள் தொடர்பான கூட்ட மனுக்கள் | ... | ... | ... |

## தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கோரி வரப்பெறும் மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் மனுதாரர்களுக்கு தகவல் அளித்திடும் பொருட்டு மேலாளர் பொது தகவல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையர் ஆவார்.

கடந்த அறிக்கையாண்டில் 77 மனுக்கள் பெறப்பட்டு உரிய பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேல் முறையீட்டு மனுக்கள் ஏதுமில்லை.

## வழக்குகள் விபரம் 01.04.2022 முதல் 31.03.2023 முடிய

### வழக்கு இனங்கள்

**வழக்குகள்**

இந்நகராட்சியில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விபரங்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 1) டில்லி உச்சநீதி மன்றம் | .. | 2 |
| 2) சென்னை உயர்நீதி மன்றத்தில் | .. | 0 |
| 3) சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை | .. | 1 |
| 4) மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் | .. | .. |
| 5) மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் | .. | 0 |
| மொத்தம் | .. | 3 |

**பிரிவு வாரியான வழக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| 1) பணியமைப்பு | .. | 0 |
| 2) குத்தகை | .. | 0 |
| 3) நகரமைப்பு பிரிவு | .. | 1 |
| 4) பொது சுகாதாரப் பிரிவு பணியமைப்பு | .. | 2 |
| மொத்தம் | .. | 3 |

## நிர்வாகம்

அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் அரசாணையின்படி நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றது. ஊழியர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. சீருடை பெற தகுதியுடைய கடைநிலை ஊழியர்களுக்கும், சுகாதாரப் பிரிவு நகர சுத்தி தொழிலாளர்களுக்கும், இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்பட்டது.

## தகவல் மையம்

பொது மக்களின் நலன் கருதி அரசு அறிவுறுத்தியதற்கு ஏற்ப, 02.08.1997ம் நாள் முதல் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு காலதாமதம் தவிர்க்கப்பட்டு பொது மக்கள் விரைந்து பயனடையும் வகையில் பணிகள் செயல்பட்டு வருகின்றது.

### அறிக்கையாண்டில் பெறப்பட்ட மனுக்கள் விபரம்

| வ.எண் | மனுக்கள் விபரம் | பெறப்பட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்டது | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | சொத்து வரி பெயர் மாற்றம் | 366 | 366 | 0 |
| 2. | சொத்து வரிவிதிப்பு | 152 | 151 | 1 |
| 3. | கட்டிட அனுமதி | 150 | 133 | 0 |
| 4. | குடிநீர் இணைப்பு | 66 | 64 | 2 |
| 5. | அச்ச அருவருக்கத்தக்க உரிமம் | | | |
| 6. | பிறப்பு, இறப்பு சான்றிதழ் | | | |

**<u>நகராட்சிக்கு வரும் கடிதங்கள் பொது மக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்வதற்கான கால அளவு</u>**

| | | |
|---|---|---|
| 1. | சொத்து வரிவிதிப்பு | 30 தினங்கள் |
| 2. | வாடகை மதிப்பு அத்தாட்சி, சொத்து வரி, கேட்பு பதிவேட்டில் வீட்டு வரி நகல், பிறப்பு இறப்பு நகல் வழங்கல் | 7 தினங்கள் |
| 3. | வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் | 7 தினங்கள் |
| 4. | கட்டிட அனுமதி விண்ணபத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது | 30 தினங்கள் |
| 5. | அச்ச அருவருப்பு தக்க தொழில்கள் உரிமம் வழங்கல் | 30 தினங்கள் |
| 6. | சொத்து வரி பெயர் மாற்றம் செய்தல் | 10 தினங்கள் |
| 7. | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் | 7 தினங்கள் |

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

## 3

# பொறியியல் பிரிவு

# III. பொறியியல் பிரிவு

இந்நகராட்சியில் 01.04.2022 முதல் 31.3.2023 முடிய பொறியாளர்களும் மற்றும் பொறியியல் பிரிவு பணிக்காக உதவி பொறியாளர் ஒருவரும், மின் பணிக்காக மின்பணி கண்காணிப்பாளர் ஒருவரும் மற்றும் தேவையான இதர பணியாளர்கள் உள்ளனர்.

**காலிப்பணியிட விபரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது உள்ள பணியிடம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | பொறியாளர் | 1 | 1 | 0 |
| 2. | உதவி பொறியாளர் | 1 | 1 | 0 |
| 3. | பணி ஆய்வர் | 1 | 0 | 1 |
| 4. | மின்பணியாளர் | 1 | 1 | 0 |
| 5. | ஒயர்மேன் | 2 | 1 | 1 |
| 6. | பிட்டர் | 1 | 1 | 0 |
| 7. | மின் கம்பி உதவியாளர் | 4 | 1 | 3 |
| 8. | தோட்ட காவலர் | 1 | 1 | 0 |
| 9. | பூங்கா காவலர் | 1 | 1 | 0 |
| 10. | ஓட்டுனர் | 2 | 2 | 0 |
| 11. | கிளீனர் | 3 | 2 | 1 |
| 12. | குடிநீர் பிரிவு காவலர் | 2 | 1 | 1 |
| 13. | சாலை பணியாளர் | 2 | 1 | 1 |
| 14. | மின்கண்காணிப்பாளர் | 1 | 1 | 0 |
| 15. | டர்ன் கார்க் | 1 | 1 | 0 |
| | மொத்தம் | 24 | 18 | 7 |

இப்பிரிவில் அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் சாலைகளின் விபரம் பின்வருமாறு.

| | 2022–23 |
|---|---|
| சிமெண்ட் தளம் சாலை | 22.736 கி.மீ |
| தார்தளம் | 94.819 கி.மீ |
| கருங்கல் ஜல்லி | .. |
| மண்சாலை, சரளைதளம் சாலை | 3.732 கி.மீ |
| பேவர்பிளாக் சாலை | 4.123 கி.மீ |
| நகராட்சி சாலை நீளம் | 125.411 கி.மீ |
| நெடுஞ்சாலை நீளம் | 20. 080 கி.மீ |
| கூடுதல் | 145.491 கி.மீ |

**<u>2022–2023–ல் முடிக்கப்பட்ட திட்டப்பணிகள் விபரம்</u>**
**<u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–23–ம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ள பணிகள்</u>**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, அழகிரி மண்டபம் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 11.00 |

**<u>பொது நிதி பணிகளின் கீழ் 2022–2023–ல் முடிக்கப்பட்டுள்ள வடிகால் மற்றும் இதர பணிகள் விபரம்</u>**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | | |

**<u>வண்டி வாகன பராமரிப்பு</u>**

இந்நகராட்சியில் அடியிற்கண்ட விபரப்படியான வாகனங்கள், குடிநீர், பொது சுகாதாரம், தெரு விளக்கு மற்றும் அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஜீப்புகள் | 4 |
| 2. | குடிநீர் லாரி | 1 |
| 3. | டிப்பர் லாரி | 2 |
| 4. | கழிவு நீர் அகற்றம் வாகனம் | 1 |
| 5. | காம்பக்டர் வாகனம் | 2 |
| 6. | டம்பர் பிளேசர் | 1 |
| 7. | LCV | 15 |
| 8. | BOV | 33 |

2022–23ம் ஆண்டில் நகர்நல பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு கணக்கு எண்.. 2016 மற்றும் 2070க்கு கீழ் வண்டி வாகனங்கள் பராமரிப்பின் ரூ.        இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் செலவினம் ரூ. 0.82 இலட்சம் ஆகும்.

## பட்டுக்கோட்டை நகராட்சி
## தெருவிளக்கு பராமரிப்பு விபரம்

நகராட்சி பராமரிப்பில் உள்ள மின் விளக்குகள் விபரம் (33 வார்டுகளுக்கும்)

| மின் விளக்குகளின் விபரம் | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 |
|---|---|---|---|---|
| குழல் விளக்குகள் | .. | .. | .. | .. |
| சோடியம் ஆவி விளக்குகள் | 502 | 502 | 502 | 502 |
| சி.எப்.எல். | .. | .. | .. | .. |
| LED | 3480 | 3489 | 3731 | 3731 |
| HIGHMAS (உயர்மின் கோபுர விளக்கு) | 3 | 3 | 3 | 3 |
| **மொத்த விளக்குகள்** | **3985** | **3989** | **4236** | **4236** |

2022–2023ம் ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவினம் .. ரூ.31.00இலட்சம்

2022–2023ம் ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தலைப்பின் கீழ் மின்கட்டண செலவினம் .. ரூ.62.73இலட்சம்

சென்ற ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு செலவினம் .. ரூ.28.56 இலட்சம்

சென்ற ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு மின்கட்டண செலவினம் .. ரூ. 57.60 இலட்சம்

<u>குடிநீர் விநியோகம் பற்றிய விரிவான விபரங்கள்</u>

பட்டுக்கோட்டை நகராட்சி பரப்பளவு 21.83 சதுர கிலோ மீட்டர் கொண்டுள்ளது. மொத்த வார்டுகள் எண்ணிக்கை 33 ஆகும். 2011ம் ஆண்டு கணக்கின்படி உத்தேச மக்கள் தொகை 73135 ஆகும்.

பட்டுக்கோட்டை நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் சாந்தாங்காடு தலைமை நீரேற்று நிலையத்தினை ஆதாரமாக கொண்டு 1961ம் ஆண்டு 10.00 MLD குடிநீர் உற்பத்தி அளவின்படி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் பின் குடிநீர் அபிவிருத்தி திட்டம் 1998 ஆம் ஆண்டு பணிகள் ஆரம்பித்து 2000–ம் ஆண்டில் குடிநீர் உற்பத்திஅளவு70லட்சம்அதிகரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் ஆதாரம் சாந்தாங்காடு தலைமை நீர்தேக்க நிலையம், கொண்டிக்குளம் நீர்தேக்க நிலையம், மாட்டுசந்தை நீர் உற்பத்தி நிலையம் மற்றும் வண்டிப்பேட்டை சாந்தாங்காடு ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து

மின் மோட்டார் மூலம் குடிநீர் சேகரிக்கப்பட்டு வருகிறது. 12 மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் தினமும் 7.20 MLD விநியோகம் செய்யப்படுகிறது. இதன்படி நாள் ஒன்றுக்கு 90 LPCD வழங்கப்படுகிறது.

01.04.2022 முதல் 31.03.2023 முடிய புதிய இணைப்புகள் வீட்டு உபயோக குழாய் இணைப்புகள் 64 எண்ணிக்கையும், வீட்டு உபயோகம் இல்லாத இணைப்புகள் 5 எண்ணிக்கையும் அளிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் உபவிதிகளில் 01.04.2022 முதல் 31.03.2023 முடிய குடிநீர் இணைப்பு தொகை மற்றும் குடிநீர் கட்டணம் கீழ்க்கண்டவாறு உயர்வு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | இணைப்பு விபரம் | வைப்புத் தொகை விபரம் | மாதாந்திர கட்டண விபரம் |
|---|---|---|---|
| 1. | வீட்டு இணைப்பு | ரூ.2000 | ரூ.149.00 |
| 2. | வணிக இணைப்பு | ரூ.5000 | ரூ.588.00 |
| 3. | தொழிற்சாலை இணைப்பு | ... | ... |

<u>2) மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்</u>

1) கடைவீதி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (3.64 லட்சம் லிட்டர் கொள்ளளவு)
2) வண்டிப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (10 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
3) நகராட்சி அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (15 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
4) கரிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.(10 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
5) லெட்சத்தோப்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (5.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
6) மேலத் தெரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (1.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
7) சிவக்கொல்லை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (1.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
8) பாக்கியம் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (1.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
9) பாப்பாவெளி பாளையம் 0.60 லட்சம் லிட்டர் கொள்ளளவு
10)லெட்சத்தோப்பு வடக்கு 0.60 லட்சம் லிட்டர் கொள்ளளவு
11) வளவன்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (5.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)
12) தட்டான்குளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (5.00 லட்சம் லிட்டர்கொள்ளளவு)

இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 10000 வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முடிய 8827இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 64ஆகும். அதில் வீட்டு இணைப்பு 59ஆகும். வீட்டு உபயோகம் இல்லாதது 5 ஆகும்.

குடிநீர் விநியோகம் நகரை நான்கு மண்டலங்களாக பிரித்து காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் வழங்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 7.20 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. வீட்டு இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணம் மாதம் ரூ.149/-நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. வணிக உபயோகமுள்ள இணைப்புகளுக்கு மாதம் **ரூ.588**/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் கட்டணமாக அறிக்கையாண்டில் ரூ.123.71 லட்சம் வசூலிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ரூ.102,48 லட்சமாகும். குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் கடந்த 19.1.2000 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. அரசாணை எண்..69, நாள்.. 4.05.1998-ன்படி ஒப்பந்த அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட குடிநீர் விநியோகப்பணி 15.9.2004 வுடன் முடிவு செய்யப்பட்டு 16.9.2004 முதல் நகராட்சி குடிநீர் விநியோக பணியாளரை கொண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. பராமரிப்பு செலவாக அறிக்கையாண்டில் ரூ.17**.16**/-லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**<u>நீரேற்றும் நிலையங்கள்</u>**

1) சாந்தாங்காடு நீரேற்று நிலையம்
2) கொண்டிக்குளம் நீரேற்று நிலையம்
3) மாட்டுசந்தை நீரேற்று நிலையம்
4) கரிக்காடு ஆழ்துளை கிணறு நீரேற்று நிலையம்
5) லெட்சத்தோப்பு ஆழ்குழாய் கிணறு நீரேற்று நிலையம்

**<u>பாதாள சாக்கடை திட்டம்</u>**

பாதாள சாக்கடை திட்டம் இந்நகராட்சியில் ஏதும் இல்லை.

**<u>கல்வி</u>**

இந்நகராட்சி பகுதியில் ஏற்கனவே நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வந்த 14 பள்ளிகளை 1.4.90 முதல் நிர்வாக பொறுப்பினை அரசு கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. அறிக்கையாண்டில் சொத்து வரியுடன் வசூலிக்கப்பட்டு வரும் கல்வி வரியாக ரூ. லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் ரூ. 118.00 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**<u>Bio Mining</u>**

இந்நகராட்சி உரக்கிடங்கில் தேங்கியுள்ள **43,498** கொள்ளளவு கொண்ட குப்பைகளை பயோ மைனிங் முறையில் பிரிப்பதற்கு **15.07.2021–ல்** வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணி **23,500**$M^3$ குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

KNMT-21-22

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் **21** மண் சாலைகள் பேவர் பிளாக் சாலையாக மேம்பாடு செய்ய **394.50** இலட்சம் மதிப்பீட்டில் **4.125** கி..மீ. நீளத்தில் சாலை அமைக்கப்படவுள்ளது. இதில் **20** சாலை பணிகள் **1** மழைநீர் வடிகால் பணியும் மற்றும் சாலைப்பணியும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் **21–22–ம்** ஆண்டு நவீன எரிவாயு தகன மேடை தஞ்சை சாலையில் அமைக்கும் பணிக்கு ரூ. **150.00** இலட்சம் மதிப்பீட்டில் **95** சதவீதம் பணி முடிவுற்றது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் **21–22–ம்** ஆண்டில் **2** குளங்கள் மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.**354.70** இலட்சம் மதிப்பீட்டில் குளம் மேம்பாட்டு பணி நடைபெற்று
வருகிறது.

KNMT-22-23

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் **2022–23** திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட NGGO நகரில் அறிவுசார் மையம் அமைக்க ரூ.**114.43** இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் **2022–23** திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டைக்குளம், ராமசாமி குளம், உத்தண்டிக்குளம் ஆகியவை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.**232.30** இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு இதில் உத்தண்டிக் குளம் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள **2** குளங்கள் பணி நடைபெற்று வருகிறது.

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் **2022–23** திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காசாங்குளம் வடகரையில் புதிதாக மார்க்கெட் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் **2022–23** திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆயிஷா பவுண்டேஷன் பூங்கா மற்றும் PSS நகர் பூங்கா மேம்பாடு செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு PSS நகர் பூங்கா பணி முடிவுற்றுள்ளது. ஆயிஷா பவுண்டேஷன் பூங்கா பணி நடைபெற்று வருகிறது.

NNT – 2022-23

இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் **2022–23–ன்** கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அந்தோனியார் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பேவர்பிளாக் தரைத்தளம் அமைத்தல், வார்டு எண்.**21** மற்றும் வார்டுஎண்.**32** ஆகியவற்றில் CCTV Camera அமைக்கும் பணி ஆகியவற்றிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

<u>I & A – 2022-23</u>

இந்நகராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2022–23–ன் கீழ் நரியம்பாளையம் பகுதியில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்க ரூ.2000.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

<u>NSMT – 2022-23</u>

இந்நகராட்சியில் நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022–23–ன்கீழ் பழுதடைந்த தார்சாலைகள் மேம்பாடு செய்ய ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் 6.06 மீ. நீளத்திற்கு 15 சாலைகள் மேம்பாடு செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு 13 சாலைப்பணிகள் முடிவுற்றுள்ளது 2 சாலைப்பணிகள் நடைபெற்று வருகிறது.

<u>15th CFC</u>

15–வது நிதிக்குழு மான்யம் 22–23 கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோகப் பணிகளுக்கு 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 2 பணிகள் நடைபெற்று முடிவுற்றுள்ளது. மேலும் மீதமுள்ள 1 பணி 90 சதவீதம் முடிவுற்றது.

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

## 4

# பொது சுகாதார பிரிவு

# IV- பொது சுகாதாரம்

இந்நகரின் பொது சுகாதார பணிகளை செய்து தர ஒரு சுகாதார அலுவலர், மூன்று துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் 6 பேர் பணிபுரிந்து வருகின்றனர். துப்புரவு பணிகளை செய்திட தூய்மைப் பணியாளர்களும், பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் லாரிகளை பராமரித்து இயக்கிட லாரி ஓட்டுநர்களும் பணிபுரிந்து வருகின்றனர். துப்புரவு பணிகளை மேற்கொள்ள மொத்தம் 42 ஆண் தூய்மைப், பணியாளர்களும், 50 பெண் தூய்மை பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் நகரின் முக்கிய 20 வார்டுகள் துப்புரவு பணிகள் தனியார் சுய உதவிக்குழுக்கள் மூலம் விடப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக வருடத்திற்கு ரூ.147.85 லட்சம் வழங்கப்படுகிறது.

<u>பொது மருத்துவம்</u>

இந்நகரில் வாழும் பொது மக்களுக்கு உரிய பொது மருத்துவ சேவைகளை தாலுக்கா தலைமையிட பொது மருத்துவமனை அளித்துவருகிறது. அத்துடன் தனியார் மருத்துவமனைகளும் மருத்துவ சேவை பணிகளை அளித்து வருகிறது.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை மொத்தம் 3417 கடந்த ஆண்டு 3328 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அறிக்கையாண்டில் 457 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 648 இறப்புகள் பதிவாகியிருந்தது.

நகராட்சியால் தாய் சேய் நலவிடுதி ஒன்று இயங்கிவந்தது. அது தற்போது நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் நிகழ்வான மகப்பேறு நடவடிக்கைகள் விபரம் வருமாறு **:-**

| **வ.எண்** | **வருடம்** | **இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள்** | **இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள்** |
|---|---|---|---|
| **1)** | **2022–23** | **3417** | **457** |

நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் - 1, நகர்புற சுகாதார செவிலியர் (தற்காலிகம்) - 6 செவிலியர்-2 மருந்தாளுநர்-1, ஆய்வக நுட்புனர் -1, மருத்துவ பணியாளர் (தற்காலிகம்) -1ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நகர ஆரம்ப சுகாதார நிலையம் நடைபெற்றுவருகிறது. நகர்புற நலவாழ்வு மையம் நரியம்பாளையம்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

**<u>பணி விபரம்</u>**

தினசரி புற நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கி ஆலோசனை வழங்கப்படுகிறது. தொற்றா நோய்க்கான (NCD) பரிசோதனை மற்றும் அதற்குரிய மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கர்ப்பிணி பெண்களை பரிசோதித்தல், குழந்தைகளுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் தடுப்பூசி போடுதல். வீடுகளுக்கு சென்று கணக்கெடுத்தல், பல்ஸ்போலியோ, யானைக்கால் நோய் முகாம் நடத்துதல், மாத்திரைகள் வழங்குதல் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு உதவித்தொகை வழங்க ஆவண செய்தல். பள்ளி சிறார் நலவாழ்வு திட்டம் செயல்படுத்துதல் மற்றும் நல திட்டங்கள் செயல்படுத்துதல். தேசிய நகர்புற நல குழுமம் திட்டத்தின் கீழ் குடிசை பகுதிகளில் மாதந்தோறும் மூன்று மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும், நோயாளிகளுக்கு ECG எடுத்தல், Scan எடுத்தல், ஆய்வகத்தில் Analysier கருவி மூலம் அனைத்து பரிசோதனைகளும் செய்யப்படுகிறது. நாய்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊசி போடப்பட்டு வருகிறது.

**<u>கலவை உரம் தயாரிப்பும், விற்பனையும்</u>**

இந்நகராட்சிக்கென 5.97 ஏக்கர்பரப்பில் உரக்கிடங்கு அமைத்திட பட்டுக்கோட்டை நைனாங்குளம் புல எண்கள்..84/12, 85/13, 85/1பி, 86/1எ-ல் ரூ.19.11லட்சம் மதிப்பீட்டு செலவில் அமைத்திட அரசாணை எண்..201,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 30.3.2001ம் தேதியிட்ட உத்திரவுகளின்படி உரக்கிடங்கு திட்டம் -9ன் கீழ் அனுமதிக்கப்பட்டு நிலத்திற்கான கிரயத் தொகை ரூ.19.11லட்சம், வருவாய் துறையினருக்கு செலுத்தப்பட்டு நிலம் கொள்முதல் செய்து உரக்கிடங்கில் குப்பைகள் கொட்டுவது நிறுத்தப்பட்டு தற்பொழுது மக்கும் குப்பைகளைக் கொண்டு கலவை உரம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. நகரில் வார்டுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் பிரித்து வாங்கப்படுகிறது. 33 வார்டுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் பிரித்து வாங்கப்படுகிறது. வீடு வீடாக குப்பைகள் பெறப்படுகிறது. OCC–12-ம், MCC-5–ல் மக்கும் குப்பைகள் கொண்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மார்க்கெட் குப்பை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இயற்கை உரம் மிக குறைந்த விலையில் கிலோ ரூ.0.50/–க்கு விற்கப்படுகிறது.

**<u>திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016.</u>**

உச்சநீதி மன்ற உத்திரவின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கிட நகரில் உள்ள 33 வார்டுகளில் அன்றாடம் சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்குவதற்கு ஏதுவாக வீடு வீடாக பச்சை மற்றும் நீல நிற பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் வழியாக பொது மக்களிடம் குப்பைகள் வழங்க கூறப்பட்டுள்ளது. பெறப்படும் மக்கும் குப்பைகளை வார்டு வாரியாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுர மையம் MCC மற்றும் OCC மையங்கள் மூலம் மக்கச் செய்து கலவை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து வாங்கும் திட்டத்தினை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்திடும் வகையில், சேவை சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பள்ளி மாணாக்கர்களை கொண்டு பிரச்சார ஊர்வலங்கள் நடத்தப்பட்டு பொது மக்களிடம் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தினசரி நகராட்சி முலம் சேகரித்து வரும் குப்பை அளவு 30 மெ.டன்
குப்பையின் தன்மை.. மக்கும் குப்பை 59 சதவீதம், மக்காத குப்பை 41 சதவீதம்

**.உரம் தயாரித்தல்**

நகராட்சி எல்லைக்குட்பட்ட 5 இடங்களில் நுண் உரம் தயாரிப்பு மையம் மற்றும் 12 குப்பை உருவாகும் இடத்திலேயே உரம் தயார் செய்யும் மையத்தில் அமைத்து உரம் தயாரிக்கும் பணி தற்போது துவங்கி முறையாக நடைபெற்று வருகிறது.

**(அ) இளம்பிள்ளை வாத நோய் தடுப்பூசி முகாம் மற்றும் தடுப்பூசி திட்ட பணிகள்.**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பல்ஸ் போலியோ நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து போடும் முகாம்கள் இரண்டு தவணைகளாக நடத்தப்பட்டு மொத்தம் 6771 குழந்தைகளுக்கு சொட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் ஒரு வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு நோய் தடுப்பு முன் நடவடிக்கைகளாக தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் 6664 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நகர்புற அரசு ஆரம்ப சுகாதாரம் மற்றும் சுகாதார பிரிவு பணியாளர்களின் ஒத்துழைப்புடன் 6701 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கர்ப்பிணி தாய்மார்களுக்கான தடுப்பூசி திட்டத்தின் (டி.டி)கீழ் அறிக்கையாண்டில் 861 இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் மொத்தம் 861 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

**ஈ) யானைக்கால் நோய் தடுப்பு முகாம் :-**

யானைக்கால் நோயினை ஒழித்திட டி.இ.சி மற்றும் அல்பெண்டசோல் மாத்திரைகள் பொது மக்களுக்கு வழங்கிடும் அரசின் திட்டத்தை நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிளாஸ்டிக் டப்பா, ஜக்கு, சோப்பு, உதவி தொகை ரூ.1000/- துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**(உ) ஈமக்கிரியை மான்யமளித்தல்**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள குடும்பங்களில் மரணமடைவோர்க்கு வழங்கப்படும் ஈமக்கிரியை மான்யமாக அறிக்கையாண்டில் ஒரு நபருக்கு ரூ.2500/-வீதம் மொத்தம் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இச்செலவினத்திற்காக மான்யம் ரூ.10,000/-வரப்பெற்றுள்ளது.

## ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்

நகர்ப்புறத்தில் வாழும் நலிவுற்ற மக்களின் அடிப்படை சுகாதார நலனை வளர்த்திட தமிழக அரசினால் துவக்கப்பட்ட "ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் " கட்டித் தரும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினால் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் சுமார் 40 /- லட்சம் செலவில் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

| வ. எண் | ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைந்துள்ள இடம் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குரும்பக்குளம் பகுதியில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 10.00 |
| 2 | நாடியம்மன் கோவில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 10.00 |
| 3 | அந்தோனியார் கோவில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 10.00 |
| 4 | பூமல்லியார் குளம் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | 10.00 |

மேற்படி சுகாதார வளாகங்கள் மகளிர் சுயஉதவி குழுக்கள் பராமரிப்பில் உள்ளன. தற்போது இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆறு இடங்களில் நவீன முறையில் கழிப்பறைகள் (NAMMA TOILET) கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் நகரில் உள்ள பொது மக்களின் பொது சுகாதார நலனைக் கருத்திற்கொண்டு சமுதாய கழிப்பிடம் -20 பொது கழிப்பிடம்- 4 செயல்பட்டு வருகிறது.

## பொது நலம் பாதுகாப்பு - பல்வகை

இந்நகரில் தீ விபத்து மற்றும் விபத்து இடர்பாடுகளை தவிர்த்திட ஒரு தீயணைப்பு நிலையம் 15.12.1974 முதல் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு வாகனம் உள்ளது.

## கொரோனா வைரஸ் நோய் மற்றும் தடுப்பு பணிகள்

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக வீடுகள் தோறும் கபசுர குடிநீர் வழங்குதல், நோய் தொற்றுக்குள்ளான பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டு, கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி வாகனம் மூலம் 15 எண்ணம் ஸ்பிரேயர் மூலம் காலை, மாலை என இரண்டு நேரங்களிலும் வீடுகள், அலுவலகங்களில் சோடியம் ஹைபோகுளோரைடு, பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. களப்பணியாளர்கள் மூலம் வீடுகள் தோறும் சென்று காய்ச்சல் கண்டுள்ளவர்களை கண்டறிதல், Fever Camp நடத்துதல், கொரோனா பரிசோதனை (Swap Test) செய்தல், பாதிக்கப்பட்டவர்களை CCC மையத்திற்கு அனுப்பி சிகிச்சை அளித்தல், வீட்டு தனிமையில் உள்ளவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை தன்னார்வலர்கள் மூலம் விநியோகித்தல், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து விழிப்புணர்வு, நோட்டீஸ் வழங்கப்பட்டு கொரோனா கட்டுப்படுத்தும் பணி அறிக்கையாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**SUC பணிகள்**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி நகரில் உள்ள குடியிருப்புகள் 19082, வணிக நிறுவனங்கள் 5282 மற்றும் கல்வி நிறுவனங்கள் 18 ஆகக்கூடுதல் –24382 வரியினங்களுக்கு சேவை கட்டணம் ரூ.93.76லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2020–21–ம் ஆண்டில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.42.64 லட்சம்.

**உரம் தயாரிக்கும் பணி**

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் கழிவுகளை முறையாக சேகரித்து பிரித்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1) 33 பேட்டரி வாகனம்
2) 15 டாடா ஏசி வாகனம்
3) 2 காம்பாக்டர் வாகனம்
4) 1 ஓபன்பாடி வாகனம்
5) Bob cat

**பிளாஸ்டிக் பை அபராதம்**

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் அரசு ஆணையின்படி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்கும் வகையில் பறிமுதல் செய்தும், அரசு உத்தரவின்படி அபராதக் கட்டணம் ரூ.0.58 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் அரியலூர் சிமெண்ட் பேக்டரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

**கசடு கழிவு மேலாண்மை (FSTP)**

இத்திட்டத்தின் கீழ் நகரில் 33 வார்டுகளிலும் அமைந்துள்ள வீடுகள், வணிக நிறுவனங்களில் சேகரமாகும் செப்டிக் டேங்க் கழிவுகளை 5 வாகனங்கள் மூலம் கொண்டு சென்று FSTP–ல் சேர்க்கப்படுகிறது. இதற்கு நடை 1–க்கு ரூ.200/– வீதம் வாகன உரிமைதாரர்களிடம் வசூலிக்கப்படு.றது. இக்கழிவுகள் தொட்டியில் சேகரிக்கப்பட்டு அடியில் தங்கும் கழிவுகள் உலர்த்தப்பட்டு உரமாக்கி உரம் கிலோ 1–க்கு ரூ.0.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நீர் கழிவுகள் மரக்கன்றுகள், செடிகளுக்கு பாய்ச்சப்படுகிறது.

**நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்**

தமிழக அரசின் முதன்மை திட்டமான “நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்” சார்பாக “என் குப்பை என் பொறுப்பு” என்ற கருத்தை பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் பட்டுக்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியை குப்பையில்லா நகரம் என்கிற நிலையை உருவாக்கும் பொருட்டு பொது மக்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

**5**

# வருவாய் பிரிவு

# V- வருவாய் பிரிவு

**வரி மற்றும் வரியில்லா இனங்கள்**
**(அ) சொத்து வரி**

(அ) நகராட்சியினால் வசூலிக்கப்பட வேண்டிய சொத்து வரி மொத்தம் ரூ.**714.67** லட்சமாகும். அறிக்கையாண்டில் வசூலிக்கப்பட்ட சொத்து வரி மொத்தம் ரூ.**567.87** லட்சமாகும். இது **79.46** சதவீதமாகும்.நகரில் சொத்து வரி விதிக்கப்பட்ட வரிவிதிப்புகளின் எண்ணிக்கை 25634 ஆகும். அறிக்கை ஆண்டில் விரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை 152ஆகும். வரி வசூல் பணிகள் செய்ய 8 வருவாய் உதவியாளர்கள் 2-சிறப்பு வருவாய் ஆய்வாளர்கள் ,1- வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் உள்ளது. நகராட்சியினால் விதிக்கப்பட்ட சொத்துவரி கணக்கின்படி தனி நபர் மீதான வரிவிதிப்பு ரூ. 1690.70 ஆக உள்ளது

**(ஆ) வரியில்லா இனங்கள்**

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், கடைகள் மற்றும் பலன்தரும் மரமகசூல் இனங்கள் போன்றவைகளை ஏலம் விட்டதன்வழியே இந்நகராட்சிக்கு வர வேண்டிய மொத்த குத்தகை இனங்களின் வருவாய் 87.19/- லட்சமாகும். இதில் அறிக்கையாண்டில் ரூ.62.28லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் வருமாறு.

| வ. எ ண் | குத்தகை இனம் | 2019-2020ல் வரவு | 2020-2021ல் வரவு | 2021–2022ல் வரவு | 2022–2023ல் வரவு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்கான கட்டணம் உரிமம். | 0 | 0 | **7,20,000** | **2,59,200** |
| 2 | புதிய பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடம் மற்றும் குளியலறை குத்தகை உரிமம். | 6,83,550- | 7,17,728- | **7,54,000** | **7,60,000** |
| 3 | தனியார் சந்தை உரிம கட்டணம் (வி.என்.எஸ்) | 1,09,164- | 1,16,530- | **1,34,010** | **1,34,010** |
| 4 | வண்டிப்பேட்டை வசூல் | 3,20,250- | 336263- | **1,47,121** | **4,00,000** |
| 5 | தனியாா ஆடு அடிக்கும் ஆடுகளுக்கு சீல் வைத்தல் | 1,36,500- | 1,43,325- | **2,26,667** | **0** |
| 6 | 1.)பர்மா பெட்டிக்கடைகள், 2.)போஸ்டாபீஸ் எதிர்புறமுள்ள கடைகள்,3.) பெரிய கடைத்தெரு கடைகள், 4.)தஞ்சாவூர் ரோடு கடைகள், 5.)பாரதி நகர் கடைகள் 6.)புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் 7.)அஞ்சாநெஞ்சன் நாளங்காடி கடைகள் குத்தகை. | 42,75,178- | 51,15,739- | **53,71,526** | **65,41,736** |
| 7 | பலன்தரும் மரங்களின் மகசூல். | 3,675- | 0 | **0** | **1200** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | புதிய பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டாண்ட் | 7,82,250- | 8,21,363- | **8,62,430** | **4,54,999** |
| 9 | மினி லாரி நிறுத்துமிடம் | 1,26,000- | 1,32,300- | **1,68,867** | **0** |
| 10 | பொருள் பாதுகாப்பு அறை உரிமம் | 0 | 0 | **0** | **0** |
| 11 | தலைமை அஞ்சலகம் சாலை, ஆனைவிழுந்தான் குளம் மற்றும் நாடிமுத்து நகரில் உள்ள கட்டணக் கழிவறை உரிமம். | இலவச கழிப்பிட மாக்கப் பட்டுள்ளது | இலவச கழிப்பிட மாக்கப் பட்டுள்ளது | இலவச கழிப்பிட மாக்கப் பட்டுள்ளது | இலவச கழிப்பிட மாக்கப் பட்டுள்ளது |
| 12 | தொலைக்காட்சி பெட்டி | 1,94,000- | 2,50,587- | **2,13,885** | ஏலம் விடப்பட வேண்டும் |
| 13 | டாக்ஸி ஸ்டாண்ட் | 0 | 0 | **9,000** | **16727** |
| 14 | மீன்பிடி உரிமம் | 12,705- | 13,340- | **23,405** | **0** |
| | கூடுதல் ரூ. | 82,60,320- | 77,67,175- | **86,30,911** | **85,67,872** |

**(இ)அறிக்கையாண்டிலும், கடந்த ஆண்டிலும் வசூலிக்கப்பட்ட வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் சதவீதம் வருமாறு.:-**

| வருடம் | வரியினம் | வசூல் | | | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | கேட்பு | வசூல் | நிலுவை | |
| 2019-2020 | சொத்து வரி | 299.78 | 239.24 | 60.54 | 71.14 |
| | குடிநீர் கட்டணம் | 134.46 | 90.62 | 43.84 | 56.12 |
| | வரியில்லா இனங்கள் (குத்தகை இனம்) | 73.98 | 59.92 | 14.06 | 78.92 |
| 2020-2021 | சொத்து வரி | 454.04 | 256.04 | 198.00 | 56.39 |
| | காலிமனை வரி | 54.39 | 9.28 | 45.11 | 17.06 |
| | குடிநீர் கட்டணம் | 261.03 | 97.70 | 163.33 | 37.43 |
| | வரியில்லா இனங்கள் (குத்தகை இனம்) | 197.61 | 48.14 | 149.48 | 24.36 |
| | தொழில் வரி | 84.78 | 40.82 | 219.88 | 15.66 |
| | பயனாளர் கட்டணம் | 96.09 | 53.20 | 42.89 | 55.37 |
| 2021-2022 | சொத்துவரி | 490.**33** | **315.41** | 175.42 | **64.26** |
| | காலிமனை வரி | 29.**52** | **10.85** | **75.78** | **38.06** |
| | குடிநீர் கட்டணம் | 150.38 | 85.81 | 64.57 | 57.06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரியில்லா இனங்கள் (குத்தகை இனம்) | **107.62** | **91.57** | **16.04** | **85.09** |
| | தொழில் வரி | **127.84** | **53.45** | **74.38** | **41.81** |
| | பயனாளர் கட்டணம் | 96.09 | 53.20 | 42.89 | 55.37 |
| 2022-2023 | சொத்துவரி | **714.67** | **567.87** | 146.80 | **79.46** |
| | காலிமனை வரி | **92.48** | **26.94** | **65.53** | **29.14** |
| | குடிநீர் கட்டணம் | 338.83 | 162.86 | 175.97 | 48.07 |
| | வரியில்லா இனங்கள் (குத்தகை இனம்) | **107.62** | **91.57** | **16.04** | **85.09** |
| | தொழில் வரி | **88.83** | **55.43** | **33.38** | **62.42** |
| | பயனாளர் கட்டணம் | 96.09 | 53.20 | 42.89 | 55.37 |

சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் குத்தகை உரிம இனங்களின் நிலுவை தொகைகளை வசூலித்திட ஜப்தி மற்றும் நீதிமன்ற வழக்குகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் வசூலித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

<u>(ஈ) போக்குவரத்து வசதிகள்</u>

இந்நகரில் இருந்து மாவட்டத்தின் முக்கிய நகரங்களுக்கும் மாவட்டத்தின் வெளியில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகர்களுக்கும் மற்றும் தலைநகர் சென்னைக்கும் மக்கள் எளிதில் சென்றுவரும் வகையில் பேருந்து வசதிகள் உள்ளன. தினமும் சுமார் 350 பேருந்துகள் சென்று வந்துகொண்டுள்ளன. நகராட்சியின் நவீன மைய பேருந்து நிலையம் 3.47 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. தமிழக அரசின் “ஒருங்கிணைந்த நகரமைப்பு திட்டத்தின்” கீழ் ரூ.40.50 லட்சம் கடன் திட்டத்தில் பொதுப் பணித் துறையினர் மூலம் கட்டி முடிக்கப்பட்டு 1991 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. போக்குவரத்து துறையினரால் “பி ̇”வகுப்பு பேருந்து நிலையமாக தரம் செய்யப்பட்டுள்ளது. அரசின் உள்துறை (போக்குவரத்து-IV)துறை 04.03.2002ம் தேதியிட்ட உத்திரவுகளின்படி
பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணமாக பேருந்து ஒன்றுக்கு ரூ.12/- வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. பேருந்து நிலையத்தில் ஆண்/பெண் கழிவறைகள், சிறுநீர் கழிக்குமிடம், கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறையும் கொண்டதாக செயல்பட்டு வருகிறது.

<u>(உ) அஞ்சாநெஞ்சன் நாளங்காடி.</u>

அழகிரி நாளங்காடி தற்போது பொது நிதி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடைகள் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று 2018-19ம் ஆண்டு முதல் தனித்தனி கடைகளாக ஏலம் விடப்பட்டுள்ளது.

**(ஊ) சந்தைகள்**

தஞ்சை மாவட்ட சத்திரம் துறையினரால் நகராட்சி எல்லைக்குள் வாரச்சந்தை பராமரிக்கப்பட்டுவரப்படுகிறது. தனியாருக்கு சொந்தமான வி.என்.எஸ்.எஸ்டேட் நிறுவனத்தினரால் உள்ள தனியார் சந்தையின் மொத்த வருவாயில் 15 % நகராட்சி பங்குத் தொகையாக வசூலிக்கப்படுகிறது. 2021-2022அறிக்கையாண்டில் ரூ. 1,34,010 /-வரவாகியுள்ளது.

**(எ) வண்டிப்பேட்டை**

தனியாருக்குசொந்தமான இடத்தில் ரூ.10,000/- ஆண்டு வாடகையில் நகராட்சியால் வண்டிப்பேட்டை நடத்தப்பட்டு வரப்படுகிறது. இதில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை ஆண்டுதோறும் ஏலத்தில் விடப்படுகிறது. அறிக்கையாண்டில் இவ்வினத்தில் ரூ. 3,36,263-வரவாகியுள்ளது. சென்ற ஆண்டு 2021-2022ம் ஆண்டில் ரூ. 1,47,121/-க்கு ஏலம் விடப்பட்டு வரவாகி உள்ளது.

**(ஏ) ஆடடிக்கும் தொட்டி**

நகராட்சியில் ஆடடிக்கும்தொட்டி ஏதும் பராமரிக்கப்படவில்லை. வி.என்.எஸ். தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான ஆடடிக்கும் தொட்டி வி.என்.எஸ்.மார்க்கெட்டில் இயங்கிவருகிறது. ஆடுகளுக்கு முத்திரையிடும் உரிமம் ஏலம்விட்ட வகையில் அறிக்கையாண்டில் இவ்வினத்தில் ரூ.2,26,667/-வரவாகியுள்ளது.

**(ஐ) பர்மா பெட்டிக்கடைகள் , சாலை ஓர கடைகள் , புதிய மற்றும் பழைய பேருந்து நிலைய கடைகள் மற்றும் அஞ்சாநெஞ்சன் நாளங்காடி கடைகள்**

இந்நகராட்சிக்கு சொந்தமாக பர்மா பெட்டிக் கடைகள் -2, குடிநீர் தேக்க தொட்டி கடைகள் -5, அஞ்சலக சாலை கடைகள்-13, தஞ்சை சாலை கடைகள்-5 , பாரதி நகர் கடைகள்-4, அஞ்சாநெஞ்சன் நாளங்காடி கடைகள்-61 மற்றும் புதிய மற்றும் பழைய பேருந்து நிலைய கடைகள்- ஆகியவைகளை குத்தகைக்கு விடப்பட்டதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ. 53,71,526/-வரவாகியுள்ளது. .

**(ஒ)மர மகசூல் இனங்கள்**

இந்நகராட்சிக்கு சொந்தமான பலன்தரும் மரங்களின் மகசூலை அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை.

**(ஓ) மரம் நடுதலும், பராமரித்தலும்.**

அறிக்கையாண்டில் 25000 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்து தற்போது வரை 15000 மரக்கன்றுகள் விதை அறக்கட்டளை, பட்டுக்கோட்டை மூலம் நடப்பட்டு தொடர்ந்து பராமரிப்பு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**(ஔ) சிறுசேமிப்பு திட்ட குறியீடு**

2022-2023ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் சிறுசேமிப்பு திட்ட குறியீடு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

**6**

# நிதி நிர்வாகம்

# VI புதிய கணக்கு முறை
## (NEW ACCOUNTING SYSTEM)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறையின் **06.01.1999**ம் தேதிய அரசாணை (நிலை) எண்.8–ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கணக்கு வைப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கிணங்க **01.04.1999** முதல் இந்நகராட்சியில் புதிய கணக்கு வைப்பு நடைமுறை அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய கணக்கு முறை அமுல்படுத்தப்பட்டதில் நகராட்சியின் வரவு செலவு பற்றிய விபரங்கள் அந்தந்த மாதம் அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விவரங்கள் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் உள்ளது. மேலும் **25.12.2015–**ம் தேதி முதலில் CWBS முறையில் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது

**நகராட்சி வரவினங்கள் 2022–2023**
**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ.எண் | விபரங்கள் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 263.67 | 286 | 110 | 659.67 |
| 2 | குடிநீர் கட்டணம் | – | 338.83 | - | 338.83 |
| 3 | தொழில் வரி | 88.83 | – | - | 88.83 |
| 4 | வரியில்லா இனம் | 155.18 | - | - | 155.18 |
| 5 | மாநில நிதி ஆணைய நிதி | 690.67 | - | - | 690.67 |
| 6 | கேளிக்கை வரி | 8.86 | | | |
| 7 | முத்திரை கட்டணம் | 38.76 | - | - | 38.76 |
| 8 | 15வது நிதிக்குழு மான்யம் | 211.20 | - | - | 211.20 |
| 9 | இதர வரவினங்கள் | 982.40 | - | - | 982.40 |
| 10 | **SUC** | 109.78 | – | – | 109.78 |
| | மொத்தம் | **2285.68** | 624.83 | 110 | **1342.14** |

| நகராட்சி செலவினங்கள் 2022–2023<br>ரூபாய் இலட்சத்தில் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | விபரங்கள் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
| 1 | பணியாளர் ஊதியம் மற்றும் இதர படிகள் | 793.80 | 36.00 | 0 | 829.80 |
| 2 | ஒய்வூதியம் மற்றும் பணிக்கொடை | 294.68 | – | – | 294.68 |
| 3 | இயக்க செலவுகள் | 286.28 | 160.96 | 7.50 | 454.74 |
| 4 | பழுது மற்றும் பராமரிப்பு | 95.50 | 82.20 | 0 | 177.70 |
| 5 | திட்ட செலவு | 25.40 | 0 | 0 | 25.40 |
| 6 | நிர்வாக செலவு | 100.20 | 9.20 | 8.50 | 117.90 |
| 7 | நிதி சார்ந்த செலவு | 21.50 | 13.20 | 0 | 34.70 |
| | மொத்தம் | **1617.36** | **265.56** | **16** | **1934.92** |

## 2022–2023 வரவு – செலவு கணக்கு விபரம்

| ஆரம்ப கல்வி கணக்கு 2022–2023<br>ரூபாய் இலட்சத்தில் | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 64,12 |
| வரவு | 91,68 |
| கூடுதல் | 155,81 |
| செலவு | 126.56 |
| ஆண்டு இறுதி இருப்பு | 30.99 |

| குடிநீர் விநியோக நிதி 2022–2023<br>ரூபாய் இலட்சத்தில் | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 202.91 |
| வரவு | 403.48 |
| கூடுதல் | 606.39 |
| செலவு | 509.49 |
| ஆண்டு இறுதி இருப்பு | 251.77 |

| வருவாய் நிதி 2022–2023<br>ரூபாய் இலட்சத்தில் | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 365.50 |
| வரவு | 284.04 |
| கூடுதல் | 649,54 |
| செலவு | 350.50 |
| ஆண்டு இறுதி இருப்பு | 299.04 |

<u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>
<u>கடன் நிலுவை விபரம்</u>

| வ. எ ண் | நிறுவன விபரம் | கடன் எண் | செலுத்த வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | அசல் | வட்டி | கூடுதல் |
| 1 | சாலைகள் 2005–06 TNUDF | LLD 0001320 | 16384 | 0 | 16384 |
| | | கூடுதல் | 16384 | 0 | 16384 |
| 2 | சாலைகள் மேம்பாடு | 52561 | 412616 | 0 | 412616 |
| 3 | IDSMT/TUFIDCO | 6019 | 1000000 | 0 | 1000000 |
| 4 | R Roads (old LLD 455) Mudf | LLD 0001037 | 31379 | 0 | 31379 |
| 5 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2095 | 209896 | 0 | 209896 |
| 6 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2096 | 114192 | 0 | 114192 |
| 7 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2097 | 225059 | 0 | 225059 |
| 8 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2101 | 310658 | 0 | 310658 |
| 9 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2102 | 101954 | 0 | 101954 |
| 10 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட ஊரக கட்டமைப்பு | 2106 | 405572 | 0 | 405572 |
| | | கூடுதல் | 2827710 | 0 | 5530520 |
| 11 | சிறப்பு சாலைகள் அபிவிருத்தி திட்டம் | TK 158 | 694019 | 0 | 694019 |
| 12 | குளம் மேம்பாட்டு பணி | LLD 0002074 | 67,00,000 | 5,20,000 | 67,00,000 |
| 13 | SRP சாலை பணி | LLD 0002120 | 42500000 | 8,50,000 | 42500000 |

## வங்கி இறுதி இருப்பு

| Sl.No | A/C Code Number | Nature of Accounts | Bank Name | Bank Account No | Closing Balance as on 31.03.2023 |
|---|---|---|---|---|---|
| 1. | 3060 | Revenue Colletion | Indian Bank | 882609507 | 8087324.53 |
| 2. | 3066 | RF Payment A/C | Indian Bank | 882609052 | 1146189.15 |
| 3. | 3069 | Education Fund | Indian Bank | 882600344 | 3099264.45 |
| 4. | 3064 | SFC | State Bank of India | 10772082720 | 23188780.50 |
| 5. | 31236 | 13th F.C. | State Bank of India | 10772084115 | 110968 |
| 6. | 3076 | IHSDP | Indian Bank | 882610137 | 989448 |
| 7. | 3061 | Water supply | Indian Bank | 882609948 | 25177344.55 |
| 8. | 3063 | Deposit | Indian Bank | 6846082604 | 7216637.50 |
| 9. | 3065 | Turip | HDFC | 50200002960331 | 255431 |
| 10. | 3067 | Library cess | Indian Bank | 882610319 | 1374268 |
| 11. | 3068 | Capital account | Indian Bank | 6910631406 | 281310 |
| 12. | 3069 | Improvement of water body | Indian Bank | 6609043430 | 5008.00 |
| 13. | 3070 | Online payment | City Union Bank | 500101010962650 | 5049101 |
| 14. | 3071 | NUHM | City Union Bank | 510909010076356 | 38871 |

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

7

# தணிக்கை

# VII- தணிக்கை

## தணிக்கை கட்டணம் (Audit Fees)

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி தணிக்கை கட்டணம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | ஆண்டு | செலுத்திய தொகை ரூ. | நாள் |
|---|---|---|---|
| 1 | 2007–2008 | 1,02,737 | 19.10.2010 |
| 2 | 2008–09 | 1,22,602 | 19.12.2011 |
| 3 | 2009–10 முதல் 2010–11 | 2,35,128 | 14.05.2014 |
| 4 | 2011–2012 | 1,30,378 | 7.7.2014. |
| 5 | 2012–13 | 1,13,747 | 19.3.2016 |
| 6 | 2013–14 | 1,10,532 | 22.6.2016 |
| 7 | 2014–15 | 1,09,665 | 12.5.2017 |
| 8 | 2015–16 | 1,04,360 | 26.10.2017 |
| 9 | 2016–17 | 87,363 | 18.05.2018 |
| 10 | 2017–18 | 1,09,665 | 18.01.2019 |
| 11 | 2018–19 | 1,65,285 | 25.06.2020. |
| 12 | 2019–20 | 1,46,039 | 23.11.2021 |
| 13 | 2020–21 | 2,10,808 | 18.08.2022 |
| 14 | 2021–22 | 2,18,491 | 28.07.2023 |

## நிலுவை தணிக்கை பத்திகள்

31.03.2023–ம் தேதியன்று இந்நகராட்சியில் நிலுவையில் உள்ள தணிக்கை தடை பத்திகள் பின்வருமாறு

| வ.எண் | விபரம் | சாதாரண பத்திகள் | சிறப்பு பத்திகள் | கூடுதல் |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்ப இருப்பு | 256 | 461 | 717 |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | .. | .. | .. |
| 3. | நிவர்த்தி செய்யப்பட்டது | .. | .. | .. |
| 4. | நிலுவை | 256 | 461 | 717 |

**மாநில முதன்மை கணக்காயர் அலுவலக நிலுவை பத்திகள் (A.G. Audit)**

| வ.எண் | விபரம் | நிலுவை பத்திகள் |
|---|---|---|
| 1. | ஆரம்ப இருப்பு | 24 |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | .. |
| 4. | நிவர்த்தி செய்யப்பட்டது | .. |
| 5. | நிலுவை | 24 |

**வைப்புத்தொகை 2022–23**

இந்நகராட்சியில் 2022–23–ம் ஆண்டில் வைப்புத்தொகை பெறப்பட்டு திரும்ப வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

| வ.எண் | தலைப்பு எண் | ஆரம்ப இருப்பு ரூ. | வரவினம் ரூ. | செலவு ரூ. | இறுதி இருப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 3401001 Tender Deposit contractor | 358.06 | 977.77 | 280.57 | 427.78 |
| 2 | 3401004 Retention of money | 176.83 | 207.04 | 138.74 | 170.07 |
| 3 | 3401002 Tender Deposit suppliers | 2.30 | 0 | 0 | 2.30 |
| 4 | 3402001 Security Deposit lease | 104.51 | 490.79 | 335.76 | 120.02 |
| 5 | 3401003 Security Deposit contractor | 83.39 | 82.44 | 68.90 | 0 |
| 6 | 3408001 Other Deposit | 157.30 | 66.07 | 0 | 163.91 |
| 7 | 3408002 Election Deposit | 2.70 | 0 | 1.08 | 1.52 |

**முன்பணங்கள் – 2022–2023**

இந்நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டில் வழங்கப்பட்ட முன்பணங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது,

| வ.எண் | கணக்கு தலைப்பு | கணக்கு விபரம் | ஆரம்ப இருப்பு | வரவு | செலவு | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 4601001 | பண்டிகை முன்பணம் | 39.81 | 14.02 | 13.22 | 39.01 |
| 2. | 4601007 | வாகன முன்பணம் | .58 | 0 | 0 | .58 |
| 3. | 4601005 | கணினி முன்பணம் | .23 | 0 | 0 | .23 |
| 4. | 4601003 | Tour Advance | .84 | 0 | 0 | .84 |
| 5. | 4601004 | Pay and T.A on Transfer Advance | 2.20 | 0 | 0 | 2.20 |
| 6. | 4605002 | Khadi Advance | 0 | 0 | 0 | 0 |
| 7. | 4605004 | Immediate Advance | 30.49 | .25 | .75 | 29.99 |
| 8. | 4605009 | Calculator Advance | 0.007 | 0 | 0 | 0.007 |
| 9. | 4605010 | Advance Recoverable expenses | 4.53 | 0 | 0 | 4.53 |

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–23

## 8

# நகரமைப்பு பிரிவு

# VIII. நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவு பணிக்காக 1 நகரமைப்பு அலுவலர், 1 நகரமைப்பு ஆய்வாளர், ஒரு உதவிபட வரைவாளர் மற்றும் இரண்டு சங்கிலியாளர்கள் உள்ளனர். நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் 19.05.2022 முதல் காலியாக உள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை அரசாணை (நிலை) எண்.66 நாள் 17.01.2000ல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தனித்த உளளூர் திட்ட குழுமங்களிலும் நகரமைப்பு திட்ட பணிகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதி வழங்கும் பணிகள் விரைவாக நடைபெற அத்திட்ட குழுமங்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 91–ஏ(1)ன் கீழ் இக்குழுவிற்குரிய அதிகாரங்களை செயல்படுத்த நகராட்சி ஆணையருக்கோ அல்லது நகராட்சி ஆணையாளரையும், அதிகபட்சமாக ஆறு நபர்களுக்கு மிகாமல் நகர்மன்ற உறுப்பினர்களை கொண்ட ஒரு சிறு குழுவிற்கோ தாங்களே அதிகாரம் அளித்து ஆணையிடலாம் என அனைத்து தனித்த (Single Local Planning Authority) உள்ளூர் திட்ட குழுமங்களுக்கு அரசு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் தனி அலுவலர் / உறுப்பினர் செயலர் அவர்கள் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் செயல்பட்டு வருகிறது.

## அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள்

இந்நகராட்சியில் 01.04.2022 முதல் 31.03.2023 வரை அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிவிப்புகள் கொடுத்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இயந்திர நிறுவன அனுமதி

31.03.2023 வரை இயந்திர அனுமதி வழங்க வேண்டியது ஏதும் இல்லை. நடப்பு ஆண்டில் இயந்திர நிறுவனம் அமைக்க விண்ணப்பம் ஏதும் வரவில்லை.

**<u>கட்டிட அனுமதி விண்ணப்பங்கள்</u>**

இந்நகராட்சியில் கட்டிட அனுமதிக்கு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் 01.04.2022–2023–ல் நிலுவை ஏதுமில்லை. அரசாணை நிலை எண்..18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.. 04.02.2019–ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி கட்டிட அனுமதிக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இணையதளம் (Online) மூலம் பதிவேற்றம் செய்து மேற்கண்ட விண்ணப்பங்கள், நகரமைப்பு பிரிவில் பரிசீலனை செய்து உரிய அனுமதி இணையதளம் (Online) மூலம் வழங்கப்படுகிறது. அரசாணை நிலை எண்..154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.. 13.10.2020ன் அதிகார பகிர்வின்படி உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 10000 சதுர அடி தரை பரப்பு வரை, 8 குடியிருப்புகள் வரை கொண்ட 12 மீட்டர் உயரத்திற்கு மிகாது தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் மூன்று தளங்கள் கட்டிட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் வணிக உபயோக கட்டிடங்களை பொறுத்தமட்டில் 2000 சதுர அடி தரைத்தளம் மற்றும் முதல் தளம் தனித்த கட்டுமானத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 14–ல் கட்டிட அனுமதிகாலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு ஏற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு ஏற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின்படி கட்டண வசூல் செய்யப்படுகின்றது. உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி பரப்பளவிற்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுர அடிபரப்பளவிற்கு கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்கள் – கள ஆய்வு இன்றி எளிய முறையில் ஆவணங்களின் அடிப்படையில் இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

01.04.2022 முதல் 31.03.2023 முடிய கட்டிட அனுமதி கோரி 150 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றில் 133 விண்ணப்பங்கள் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 17 விண்ணப்பங்கள் கட்டிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

**<u>முழுமை திட்ட விதிகள் விளக்கம்</u>**

இந்நகராட்சியில் வளர்ச்சி பெறும் நகரத்திற்கு உட்பட்ட பகுதிகளை உள்ளூர் திட்ட குழு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட உள்ளூர் திட்டப்பகுதிக்கு முழுமைத்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகிறது. பட்டுக்கோட்டை உள்ளூர் திட்டக் குழுமம், முழுமைத்திட்டம், அரசாணை எண்.Ms. No.696 வீட்டுவதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD-IV-2) நாள் **09.08.1995**ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டை முழுமைத்திட்டத்தில் ஒரு நகரிலுள்ள எல்லா நிலப்பகுதிகளையும் கீழ்கண்டவாறு பல்வேறு நில உபயோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. எனவே எந்த ஒரு நிலம் அல்லது கட்டிடமோ அபிவிருத்தி செய்ய வேண்டுமெனில் முழுமைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நில உபயோகங்களின்படி இருந்தால் தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி அளிக்கப்படும்.

விதிகள்..அரசாணை எண்.1730 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை)நாள் 24.07.1974

| | |
|---|---|
| 1) | உபயோக மண்டலம் 1–A<br>முதன்மை குடியிருப்பு உபயோக மண்டலம் |
| 2) | உபயோக மண்டலம் 1B கலப்பு குடியிருப்பு உபயோக மண்டலம் அனுமதிக்கப்படும் உபயோகங்கள் |
| 3) | உபயோக மண்டலம் 2<br>வணிக உபயோக மண்டலம் |
| 4) | உபயோக மண்டலம் 3-A<br>கட்டுப்படுத்தப்பட்ட தொழில் உபயோக மண்டலம் |
| 5) | உபயோக மண்டலம் 3-B<br>பொதுதொழில் உபயோக மண்டலம் |

**விளக்கம்..**

ஒவ்வொரு நகரத்திலும் அந்தந்த பகுதிகளின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திகளை ஒழுங்கு படுத்தவும் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் நகராட்சியால் தயாரித்து அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அப்பகுதியில் சாலை மற்றும் மற்ற வசதிகளை புதிதாக அமைக்கவும், அபிவிருத்திகளை ஒழுங்குபடுத்தவும் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. நகர்ப்பகுதியில் மனை உரிமையாளர்கள், புதிதாக மனை வாங்குபவர்கள் இத்திட்டத்தின்படி நில உபயோகம் பற்றி தெரிந்து மனை அபிவிருத்தி செய்தல், கட்டிடம் கட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டப்பகுதியிலுள்ள நிலங்கள் பின்வருமாறு பல நில உபயோக பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன.

**I- குடியிருப்பு பகுதி**

**1)** திட்ட வரைபடத்தில் வேறு உபயோகம் குறிக்கப்படாத எல்லா பகுதியும் குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படும். இப்பகுதியில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஹோட்டல்கள், பெரிய அளவிலான கட்டிடங்கள், பள்ளிகள், கிளப்புகள், பொது வழிபாட்டு கட்டிடங்கள், மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொழிற்பள்ளி அல்லது வங்கிகளின் குடியிருப்பு கிளைகள், பொழுதுபோக்கு அல்லது மனமகிழ் மன்றம் அல்லது மருத்துவமனைகள் அல்லது திரையரங்குகள் இவை போன்றவை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

**II-கடை மற்றும் வியாபார கட்டிடங்கள்**

**1)** அனைத்து கடைகள் மற்றும் வியாபார கட்டிடங்களும் அனுமதிக்கப்படும்

**2)** 50 குதிரை வேக திறனுக்குட்பட்ட மின்சார சக்தியால் இயக்கப்படும் இயந்திரங்களை நிறுவுவதற்கு மட்டும் சுகாதார அலுவலரின் ஒப்புதல் பெற்றபின் அனுமதி வழங்கப்படும். நீராவி, நீர் அல்லது காற்று, இயந்திர (அல்லது) மின்சார சக்தியால் இயக்கப்படும் தொழிற்சாலைகள் அல்லது பணிமனைகள் (Workshop) அனுமதிக்கப்பட மாட்டாது.

**3)** மற்ற இதர உபயோகங்களுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் அனுமதி பெறாமல் ஒப்புதல் அளிக்கப்பட மாட்டாது.

**4)** கட்டிட அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக ஏற்கனவே பதிவு பெற்ற படவரைவாளர்கள் (Registered Engineers) உரிய தகுதியின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுஉள்ளனர். தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் **2019–**ன்படி மேற்படி பதிவு மாற்றம் செய்யப்பட்டு, Registered Engineer என அறிவிப்பு வெளியானதன் அடிப்படையில ் அதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டு தற்போது **2022–2023–**ல் Registered Engineer நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**ஆக்கிரமிப்பு**

நகரத்தில் உள்ள சாலையோர தற்காலிக ஆக்கிரமிப்புகள் மற்றும் கட்டுமான இடி பொருட்கள்அகற்றும் பணி நெடுஞ்சாலை துறை, காவல்துறையுடன் ஒன்றிணைந்து அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

**விளம்பர பலகை**

உயர் நீதிமன்ற ஆணையின்படி, நகரில் உள்ள விளம்பர போர்டுகள் வைக்க நீதிமன்ற தடை உத்திரவு உள்ளபடியால், விளம்பர போர்டு அனுமதி நகராட்சியால் வழங்கப்படுவதில்லை. மேலும் அனுமதியற்ற விளம்பர போர்டுகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகிறது.

**பூங்கா விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் விபரம்**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதில் பொது ஒதுக்கீட்டிற்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்காக்களின் எண்ணிக்கை **41** திறவிடங்கள் எண்ணிக்கை **2** விளையாடுமிடங்களின் எண்ணிக்கை **41** ஆகும்.

**மழைநீர் சேகரிப்புதிட்டம் (Rain water Harvesting)**

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் போதிய காலியிடம் உள்ள அரசு மற்றும் தனியாருக்கு சொந்தமான குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள், கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலை கட்டிடங்கள் முதலியவற்றில் மழைநீர் அமைப்பு திட்டம் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை எண்.Ms No.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள்..**11.10.2002–**ன்படி அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்ஏற்படுத்தப்பட்டுள்ளது. மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டிடங்களில், பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், மழைநீர்

சேகரிப்புக்கான கட்டமைப்புகள் அமைத்திட மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணிகள், பள்ளி கல்லூரி மாணவர்களுக்கிடையே கட்டுரை போட்டிகள், பேச்சு போட்டிகள் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பத்திரிக்கை, திரையரங்குகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சியின் மூலமாக மழைநீர் சேமிப்பு கட்டமைப்பின் அவசியம் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு வீடு வீடாக சென்று மழைநீர் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரில் முக்கிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பின் அவசியம் குறித்து பிளக்ஸ் போர்டுகள் நிறுவப்பட்டுள்ளது. நகரில் விழிப்புணர்வு குறித்து துண்டு பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பராமரிப்பில் உள்ள 18 நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு கட்டிடங்கள் மற்றும் நகராட்சி கட்டிடங்களில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளைசீர்செய்யவும்பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் நகராட்சி கட்டிடங்கள் 100% மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை உருவாக்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

## சாலையோர வியாபாரிகள் (Street Vendors)

பட்டுக்கோட்டை நகராட்சியில் தெருவோர வியாபாரிகள் விபர திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் பேரில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் 158 தெருவோர வியாபாரிகளுக்கு சர்வே செய்யப்பட்டு 137 நபர்களுக்கு பயோமெட்ரிக் அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சாலையோர வியாபாரிகளுக்கு தமிழ்நாடு அரசால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்..25715/2019/யுபிஏ–1, நாள்.. 02.04.2020 மற்றும் 26.06.2020, சென்னை–28–ன்படி கொரோனா நிவாரண நிதியாக ரூ.2000/– வீதம் 158 நபர்களில் 137 நபர்களுக்கு வங்கி மூலம் இ.சி.எஸ் முறையில் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 6 நபர்கள் இயற்கை எய்திவிட்டார்கள். மீதமுள்ள 15 நபர்கள் நகரை விட்டு வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள்.

மேலும் பாரதப் பிரதமரின் PM SVANidhi-யின் கீழ் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்..7366/2016/யுபிஏ–2, நாள்.. 15.12.2020–ன்படி 2022–ல் **349** நபர்களுக்கு கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

அதில் **469** விண்ணப்பங்கள் பெறப்பட்டு மேற்கண்ட விண்ணப்பங்கள் வங்கிகள் மூலம் கடனுதவி பெறுவதற்கு அனுப்பப்பட்டு, அதில் **391** நபர்களுக்கு கடன் உதவி வழங்க அனுமதி வழங்கப்பட்டு **384** நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. தெருவோர வியாபாரிகள் பயனடையும் அளவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர விரிவான திட்ட அறிக்கை ரூ.**8.20** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு உதவி திட்ட அலுவலர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

மேலும், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் பொருட்டு புதிய **50** வண்டிகள் பெறுவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு தற்போது **11** வண்டிகள் வரப்பெற்றுள்ளது.

## ஆதரவற்ற வீடு இல்லாதவர் தங்குமிடம் (NULM)

பட்டுக்கோட்டை நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஆதரவற்ற வீடு இல்லாதவர்களை துப்புரவு ஆய்வாளர் மூலம் ஆய்வு செய்து **10** நபர்களுக்கு விபர திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு உதவி திட்ட அலுவலர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் ரூ.**4.20** லட்சம் அளவில் மதிப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதில் ரூ.**4.20** லட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் செய்து பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆதரவற்ற வீடு இல்லாதவர்கள் **10** நபர்கள் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா நகர் சமுதாயக்கூடத்தில் தேர்வு செய்யப்பட்டு. **18.12.2019** முதல் மேற்படி இல்லம் செயல்பட்டு வருகிறது.

மேலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என தனித்தனி குளியலறை மற்றும் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. மேலும் ஆதரவற்ற வீடு இல்லாத **10** நபர்களை பராமரிக்க **Shyamala Educational Rural Youth Welfare Trust, Pattukkottai NGO** மூலம் ஒரு வருடத்திற்கு **1.20**லட்சத்தில் பராமரிக்கவும், விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு **2022–2023**–ம் ஆண்டிற்கான பராமரிப்பு தொகையாக ரூ.**1.20**லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

# பட்டுக்கோட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை 2022–2023

## 9

# மின்னணு மேலாண்மை

# IX- மின்னணு மேலாண்மை

இந்நகராட்சி கணினி பிரிவில் உதவி கணினி திட்ட அமைப்பாளர் திரு.ஆர்.எட்வின் ஆரோக்கியராஜ் அவர்கள், அறிக்கையாண்டில் பணிபுரிந்து வந்துள்ளார். புள்ளி விபர குறிப்பாளர் பணியிடம் காலியாக இருந்து வருகிறது. தமிழக அரசின் காகிதமில்லா (Paperless) நடைமுறை நிர்வாகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்பொருட்டு இந்நகராட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

**கணினி வசூல் மையங்கள்**

பொது மக்களின் சேவைக்காக நகரின் முக்கிய இடமான பேருந்துநிலையம் மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் வசூல் மையம் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இணையதளம் மூலமும் வரிவசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பிறப்பு இறப்பு சான்று வழங்கும் மையங்கள்**

பொது மக்களின் நலன் கருதி பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமனையிலும் பிறப்பு இறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**இணையதளம்**

நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் முன்னேற்றம் நகராட்சி பற்றிய புள்ளி விபரங்கள், நகர்மன்ற கூட்ட நடவடிக்கை குறிப்புகள், வரவு செலவு திட்ட அறிக்கை, நிர்வாக அறிக்கை, தணிக்கை அறிக்கை மற்றும் இதர நடவடிக்கைகள் உடனுக்குடன் பதிவு செய்யப்படுகிறது. நகராட்சி பணியாளர்களுக்கு உள்ளரங்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பணியாளர்களுக்கு மேலாளர் அவர்களால் தகவல் அறியும் உரிமச்சட்டம் குறித்த பயிற்சியும், கணினி அலுவலக இணையதளம் தொடர்பான மின்னஞ்சல் தொடர்பான பயிற்சி உதவி திட்ட அமைப்பாளர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி அளிக்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு.

- Right to Information Act
- Email sending/receiving
- Scheme updation
- Online E-Tender, On line citizen services
- Taking Demand Notice and Hand book
- Financial Accounting System
- Taking Demand Register, DCB, Daily collection, Defaulter list (Top 25, Top 50, Top 100) Single Window.
- Family Enumeration Module
- Hospital Records Module
- IHSDP/SJSRY- Step-up, Online monitoring, SBMÏ IHHL Photos Uploading and online invoice bill passing
- GDP and CM cell petition reply through on line
- Engineering Section Online updation
- Grievance module (Tracking the grievances from the public.

# முடிவுரை

பட்டுக்கோட்டை நகரில் வெகு அருகாமையில் அமைந்துள்ள கலைக் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள், பள்ளிக்கூடம், மற்றும் இதர தொழில்கள் மேம்பட்டு விளங்குவதால் இந்நகரம் மேலும் சிறப்புற்று பொருளாதார துறையிலும், நகர அபிவிருத்தி திட்டங்களிலும் உயர்நிலை பெற்றுவருகிறது. இந்நகராட்சி பொன்விழா கண்டு மக்களுக்கு அடிப்படை வசதிகளை தன்னிறைவு பெறும் வகையில் செயல்படுத்தியுள்ளது.

இந்நகர்மன்றம் மக்களுக்காக பணியிலும் மன்றத்தின் தீர்மானங்களை ஏற்று செயலாற்றும் திறனிலும் பொது மக்கள் பல நலன்களை பெற்று நகரமும் திருப்தியடைந்த முன்னேற்ற நிலை காணப்படுகிறது. பொது மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளையும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மக்களுக்கு வேண்டிய முக்கியமான வசதிகளை நிதிநிலைக்கேற்ப உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நகர்மன்றத்தின் ஆக்கப் பணிகளுக்கு பெரிதும் ஒத்துழைப்பு நல்கிய பொறியாளர், உதவி பொறியாளர், நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், மேலாளர், கணக்கர், வருவாய் ஆய்வர், துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் தன்னலம் பாராது பிறர் நலம் காத்திட பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களின் ஒத்துழைப்பால் நகராட்சி சட்டத்திற்கு உட்பட்டு நிர்வாக பொறுப்புகளையும், கடமைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது குறித்து எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகருக்கு சிறப்பான நிதி ஒதுக்கீடு செய்த தஞ்சை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், பட்டுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பட்டுக்கோட்டை நகர் வளர்ச்சி பணிகளுக்கும், முன்னேற்றத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்து உதவியதற்கு சட்மன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம் : பட்டுக்கோட்டை
நாள் : **03.11. 2023.**

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.N. குமரன், B.Sc.,<br>ஆணையாளர்<br>பட்டுக்கோட்டை நகராட்சி | நகராட்சி நிர்வாக இயக்குநர்,<br>நகராட்சி நிர்வாக அலுவலகம்,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>75, சாந்தோம் நெடுஞ்சாலை,<br>எம்.ஆர்.சி.நகர்,<br>சென்னை–28.<br><br>வழி..நகராட்சி நிர்வாக மண்டல<br>இயக்குநர், தஞ்சாவூர். |

<u>ந.க.எண்.. 140 /2010/சி1, நாள்.. 03 .11 . 2023.</u>

அய்யா,

| | |
| --- | --- |
| பொருள்.. | நிர்வாக அறிக்கை – பட்டுக்கோட்டை நகராட்சி – 2022–2023 –ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல்–தொடர்பாக. |
| பார்வை.. | இந்நகர்மன்ற தீர்மானம் எண்.. |

பட்டுக்கோட்டை நகராட்சியின் 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை இரு பிரதிகள் நகர்மன்ற தீர்மான நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இணைப்பு.. 1) 2022–2023–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை 2 பிரதிகள்.
2)நகர்மன்ற தீர்மான நகல்.

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

**14.10.2021–ஆம் தேதியன்று பட்டுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் 259–ம் எண்ணிட்ட தீர்மானத்தின் நகல்.**

---

இந்நகராட்சியின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>(ந.க.எண்..140/2010/சி1) |

**நகர்மன்ற தீர்மான எண்.. 259** **நாள்.. 14. 10. 2022.**

**.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

ஒம்/த. செளந்தரராஜன்
ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி